செ.வெ.எண்.1038 நாள்.25.11.2010

நாள்–25.11.2010

# செய்தி வெளியீடு

## வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் செயல்பாட்டினைப் பாராட்டி கூடுதலாக 10 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த உலக வங்கி அனுமதி!

* * * * * * * * *

தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளியோரின் வறுமை நிலையைக் களையவும், சமூக ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கவும், உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.717 கோடி திட்ட மதிப்பீட்டில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தை அக்டோபர் 2006 முதல் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம், தற்போது 16 மாவட்டங்களில் உள்ள மிகவும் பின்தங்கிய 70 வட்டாரங்களைச் சார்ந்த 2509 ஊராட்சிகளில், 5.2 இலட்சம் குடும்பங்களின் மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஏழை எளிய மக்களை ஒருங்கிணைத்து, புதிய அமைப்புகளை உருவாக்கி அவற்றை வலுப்படுத்துவதுடன், ஏழை எளியோரின் திறன் மற்றும் ஆற்றலை மேம்படுத்தி, திட்ட செயல்பாடுகளில் வெளிப்படையான நிர்வாகத்தை உறுதிசெய்து, அவர்களே தங்களது முன்னேற்றத்திற்கு பொறுப்பேற்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

கடந்த 4 ஆண்டுகளில் அனைத்து இலக்குகளையும் எய்தி, “வாழ்ந்து காட்டுவோம்” திட்டம் சிறப்பான சாதனைகள் பல புரிந்துள்ளது என உலக வங்கியின் இடைக்கால மதிப்பீட்டுக்குழு பாராட்டியுள்ளதோடு, மாநிலத்தின் மற்ற பகுதிகளில் உள்ள ஏழை எளியோரையும் பயன்கள் சென்றடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படவேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று, இத்திட்டத்தின் காலத்தை நீட்டிக்கவும், செயல்பாட்டுப் பகுதிகளை விரிவாக்கவும் உலக வங்கி இசைவளித்துள்ளது.

இதன் அடிப்படையில், திண்டுக்கல், மதுரை, அரியலூர், பெரம்பலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, கரூர், சிவகங்கை, விருதுநகர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள 46 வட்டாரங்கள் மற்றும் தற்போது இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நாமக்கல், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் கூடுதலாக 4 வட்டாரங்களைச் சேர்த்து மொத்தம் 50 வட்டாரங்களில் உள்ள 1661 ஊராட்சிகளில் வசிக்கக்கூடிய 3.8 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ. 950 கோடி கூடுதல் நிதி உதவிக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இக்கூடுதல் நிதியுதவியில், ரூ.883 கோடி தொகை கிராம வாழ்வாதார நிதியாகவும், ரூ.22.50 கோடி தொகை மாவட்ட மற்றும் மாநில அளவில் வாழ்வாதாரத் திட்டங்களுக்கும், ரூ.44.50 கோடி தொகை திட்ட மேலாண்மைக்கும் பயன்படுத்தப்படும். மேலும், செப்டம்பர் 2011ல் நிறைவடைய இருந்த இத்திட்ட காலத்தை செப்டம்பர் 2014 ஆம் ஆண்டு வரை கூடுதலாக 3 ஆண்டு காலத்திற்கு நீட்டிக்கவும் உலக வங்கி அனுமதியளித்துள்ளது. இந்தக் கூடுதல் நிதியுதவியையும் சேர்த்து, "வாழ்ந்து காட்டுவோம்" திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 2014ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை மொத்தம் ரூ.1667 கோடி செலவிடப்படும்.

இதன்மூலம் தமிழகத்திலுள்ள ஏழை எளியோர், ஒதுக்கப்பட்டோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் ஆற்றலைப் பெருக்கி, நிதி மற்றும் பல்வகை உதவிகளையும் வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை முனைப்போடு செயல்படுத்தவுள்ளது.

அரசு முதன்மைச் செயலர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9